[1973 பிப்ரவரி 7

## மேற்பார்வை பொறியாளர் அலுவல்கள்

* 54 வினு—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெடுஞ்சாலைத் துறையில் மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம் மதுரை மாவட்டத்துக்குத் திருச்சியிலும், இராமநாத புரம் மாவட்டத்துக்குத் திருநெல்வேலியிலும் அமைக்கப் பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், இவ்விரு மாவட்டங்களுக்கும் பொதுவாக அவைகளை மதுரையில் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரி சீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) இல்லை.

திரு. பி. எஸ். மணியன் : இந்த நெடுஞ்சாலைத் துறையில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு மேற்பார்வைப் பொறியாளர் நியமிக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு மேற்பார்வைப் பொறியாளர் நியமிக்கின்ற குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இப்பொழுது இல்லை.

## மாம்பழ ஏற்றுமதி

* 55 வினு—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடை யளிப்பாரா—

1971-72-ல் தமிழ்நாட்டிலிருந்து இங்கிலாந்திற்கு ஏற்றுமதி செய்யப்பட்ட மாம்பழத்தின் மதிப்பு என்ன?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : 1971-72 ஆம் ஆண்டில் 31—5—1971-ல் ஒரே ஒரு முறை தான் 584 கிலோ கிராம் எடை யுள்ள மாங்கனி சென்னையிலிருந்து விமானமூலம் இலண்டன் மாநகருக்குச் சோதனைக்காக மாநில வர்த்தகக் கழகத்தின் மூலம் அனுப்பப்பட்டது. இதன் மதிப்பு ரூ. 2,246-63 ஆகும். இம் மாங்கனிகள் ஆந்திர மாநிலத்தில் விளைந்தவையாகும்.